அனுமதி கொடுத்து, கேட்டு, 'இன்று எடுக்கிறேன்' அல்லது 'நாளை எடுக்கிறேன்' என்று சொல்லிவிட்டால் நாங்கள் அமர்ந்து விடுவோம். அப்படிப்பட்ட நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்று தனி நபர் தீர்மானமாகக் கொண்டு வந்து கொடுத்திருக்கிறீர்கள். இலங்கைப் பிரச்சினை சம்பந்தப்பட்டதைக் கொடுத்திருக்கிறீர்கள். நான் இது சம்பந்தமாக உங்களிடத்திலேயே discuss பண்ணியிருக்கிறேன். (குறுக்கீடு) சொல்கிறேன், கேளுங்கள். ஒரு சில குற்றச்சாட்டுகளோடு கொடுத்திருக்கிறீர்கள். அந்தக் குற்றச்சாட்டுகளிலே எது, எது admissible-ஓ அதைத்தான் எடுக்க முடியும், மற்றவற்றை எடுக்க முடியாது என்று உங்களிடத்திலேயே சொல்லியிருக்கிறேன். அதையும் Finance Bill இருக்கும்போது எடுக்க முடியாது; Rule அப்படியிருக்கிறது, Finance Bill முடிந்ததற்குப் பிறகு நாம் அதை எடுப்போம் என்று உங்களிடமே நான் discuss பண்ணியிருக்கிறேன். அதற்குப் பிறகும் நீங்கள் வேண்டுமென்றே அந்த subject-ஐக் கிளப்பினீர்கள் என்றால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) Finance Bill இருக்கும்போது வேறு எந்த subject-ம் எடுக்கத் தீர்மானங்கள் கொண்டு வரக் கூடாது என்று இருக்கிறது இல்லையா? (குறுக்கீடுகள்)

## 6. இலங்கையில் தமிழர் பகுதிகளில் நடைபெறும் போரினால் அங்குள்ள தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பணிவன்போடு தங்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இலங்கைப் பிரச்சினை, இலங்கையிலே வாழ்கிற தமிழர் பிரச்சினை என்றால், அவர்கள் தனித் தீர்மானம் கொண்டு வருவதுபற்றி நீங்கள் ஒருமித்த கருத்தோடு அந்தத் தீர்மானத்தை எடுத்துக்கொள்வதில் எங்களுக்கு மாறுபட்ட கருத்து இல்லை. இலங்கையிலே போர் நிறுத்தப்பட வேண்டும், அங்கேயிருக்கக்கூடிய தமிழர்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதிலே காங்கிரஸ் கட்சி துளியளவும்கூட பின்வாங்கவில்லை என்பதை நாங்கள் சொல்லிக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே யாருக்குமே மாறுபட்ட கருத்தே

இல்லை. ஆனால், விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட ஓர் இயக்கம். அது தடை செய்யப்பட்டது சரியானதே என்று டெல்லி உயர் நீதிமன்றம்கூட இன்றுகூட ஒரு தீர்ப்பை அளித்திருக்கிறது. அப்படி இருக்கிறபோது, விடுதலைப் புலிகளை ஆதரித்து இங்கே பல அரசியல் கட்சிகளினுடைய தலைவர்கள், பல இயக்கங்களினுடைய தலைவர்கள், பல சினிமா நடிகர்கள், இயக்குநர்கள் என்றெல்லாம் புறப்பட்டு, இன்று அவர்கள் விடுதலைப் புலிகளை வெளிப்படையாக ஆதரித்து, ராஜீவ் காந்தி கொலையையே கொச்சைப்படுத்தி, கொச்சைப்படுத்தியதோடு மட்டுமல்லாமல், ராஜீவ் காந்தி கொலை வழக்கிலே முதல் குற்றவாளியாக இருக்கிற விடுதலைப் புலிகளுடைய தலைவன் பிரபாகரனை ஓர் உலகத் தமிழன் என்றெல்லாம் புகழ்ந்து, பாராட்டி, புகழாரம் சூட்டி இன்று தமிழகத்தில் தனியான ஒரு சூழலை உருவாக்கி, கலவரத்தைக் கட்டவிழ்த்துவிடக்கூடிய நிலை எங்கு பார்த்தாலும் வந்துகொண்டிருக்கிறதே, விடுதலைப் புலிகளை வெளிப்படையாக ஆதரித்துப் பேசுபவர்களைப் பற்றி நாங்கள் இங்கே அவையிலே மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கும், அதேபோல காவல் துறையினுடைய கவனத்திற்கும் கொண்டு வந்து, அவர்கள்மீது—எப்படி வைகோ, அதேபோல அருமை அண்ணன் மு. கண்ணப்பன் மற்றும் அமீர், சீமான் போன்றவர்கள் கைது செய்யப்பட்டார்களோ, அதேபோல, மற்றவர்களும்,—யார், யாரெல்லாம் விடுதலைப் புலிகளை வெளிப்படையாக ஆதரித்து— அவர்கள் திட்டமிட்டே இப்படிப்பட்டதொரு பிரச்சாரத்தைத் தமிழகத்திலே கட்டவிழ்த்துவிட்டு, இங்கே கலவரத்தையும் கட்டவிழ்த்துவிட்டு அதிலே குளிர் காய நினைக்கக்கூடியவர்களை உடனடியாகக் கைது செய்ய வேண்டுமென்பதுதான் எங்களுடைய காங்கிரஸ் கட்சியினுடைய ஒரேயொரு நோக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நோக்கத்தை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்பதற்காகத்தான் நாங்கள் ஒரு தீர்மானத்தை, விடுதலைப் புலிகளை ஆதரிப்போரைப் பற்றி ஒரு தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோம். ஆகவே, அது எப்போது எடுக்கப்படும் என்பதைத்தான் நாங்கள் தங்களுடைய வாயிலாக அறிய விரும்புகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீர்மானத்திலே என்ன சொல்லியிருக்கிறீர்களோ, அவை அனைத்தையும் இப்போது இங்கேயே சொல்லிவிட்டீர்கள். அப்புறம் இன்னொரு நாளைக்கு எடுக்க வேண்டுமென்று சொல்லுகிறீர்களே? (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம், நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலே அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுக்கொண்டேயிருக்கிறார்கள். அங்கே போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்பதுதான் இங்கே இருக்கிற அனைவருடைய ஒட்டுமொத்தக் கருத்தாக இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு வேண்டுகோளை கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பாக வைத்தார்கள். போர் நிறுத்தம் என்பது ஒரு தரப்பிலே இருக்க முடியாது; ஆகவே, இரு தரப்பும் அதைப்பற்றி யோசிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்தார்கள். அந்த வேண்டுகோள் இன்றைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த வேண்டுகோளின் அடிப்படையில் எங்களுடைய மாநிலச் செயலாளர் தா. பாண்டியன் அவர்கள் பொதுவாக ஊடகங்கள்மூலமாக ஓர் அறிக்கையை வெளியிட்டார்கள். அதற்குப் பதிலாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், எங்களுடைய மாநிலச் செயலாளர் அவர்களுக்கும் பதில் online மூலமாகவே கிடைத்திருக்கிறது. அது வெளியிலே பத்திரிகைச் செய்தியாகவும் வந்திருக்கிறது. அந்த அரசியல் பிரிவினுடைய தலைவராக இருக்கிற நடேசன் அவர்கள், விடுதலைப் புலிகள் போரை நிறுத்தச் சம்மதம் தெரிவிக்கிறோம் என்று அறிவித்துவிட்டார்கள். ஆனால் இலங்கை அரசு நேற்றையதினம் அந்த நாடாளுமன்றத்திலே, போர் நிறுத்தம் என்பது செய்ய இயலாது, நாங்கள் தொடருவோம் என்று அறிவித்திருக்கிறார்கள்.

ஆகவேதான், இதிலேயிருக்கிற பிரச்சினை என்பது ஒரு ஒட்டுமொத்தமான கருத்துருவாக்கம், ஒரு தரப்பு ஒப்புக்கொள்ளாது என்று சொன்ன நிலையிலிருந்து, போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டதற்குப் பின்னாலும் இலங்கை அரசாங்கம் பிடிவாதம் காட்டி அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவிப்பதையே தொழிலாகக் கொண்டிருக்கிறதே, இந்த நிலைமையிலே, நமது அண்டை நாடு என்ற முறையில், நம்முடைய தமிழ்ச் சகோதரர்கள் அங்கே படுகொலை செய்யப்படுகிறார்கள் என்ற முறையில், நம்முடைய மத்திய அரசாங்கம் இதிலே துரிதமான கவனத்தைச் செலுத்தினால், அங்கே போர் நிறுத்தப்படும்; அரசியல் தீர்வு காணப்படும்; சமாதானம் கிடைக்கும். ஆனால் அதைச் செய்வதற்கு நம்முடைய மத்திய அரசு ஏன் பாராமுகமாக இருக்கிறது என்பதுதான் இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய கேள்வி. இதை, இலங்கை அரசாங்கத்தை நாங்கள் இந்தச் சபையின் மூலமாகக் கண்டிப்பதோடு போர் நிறுத்தம் செய்ய அவர்கள் முன்வரவேண்டுமென்பதை வலியுறுத்துவதோடு, மத்திய

அரசாங்கம் அதற்கு உரிய முயற்சிகளை விரைவாக, உடனடியாகச் செய்ய வேண்டுமென்று வலியுறுத்துவதற்காகத்தான் இந்த அவையிலே நாங்கள் இந்தக் கருத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே, இது நம்முடைய தமிழ்நாட்டினுடைய ஓர் உணர்வுப் பிரச்சினையாக இருக்கிறது.

முற்பகல் 11–20

இதிலே மாண்புமிகு உறுப்பினர் அருமைச் சகோதரர் திரு. ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். எங்களுக்கு அதிலே மாற்றுக் கருத்து இல்லை. அவர் சொன்ன விஷயங்கள் எல்லாம் சட்ட திட்டத்திற்கு உட்பட்ட விஷயங்கள். இந்திய கம்யூனிஸ்டு கட்சியைப் பொறுத்தவரையிலும், நாங்கள் தீவிரவாதத்தை ஆதரிப்பவர்கள் அல்ல. ஆகவே, தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் நாங்கள் ஆதரிக்கவில்லை. விடுதலைப் புலிகள் என்ற காரணத்தினாலேயே இலட்சக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் அங்கே கொல்லப்படுவதை அண்ணன் ஞானசேகரன் அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா? காங்கிரஸ் கட்சி அதை ஏற்றுக்கொள்கிறதா? அதைப்பற்றி இங்கே சொல்ல வேண்டாமா? (குறுக்கீடுகள்) இதுதான் எங்களுடைய உணர்வு. அவர்களுடைய உணர்வு அது. அதை நான் மதிக்கிறேன்; அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் ஒட்டுமொத்தமாகத் தமிழகத்தில் அமைதி நிலவ வேண்டும் என்று சொன்னால், இலங்கையிலே அமைதி நிலவ வேண்டும். தமிழர்களுக்குத் தேவையான பாதுகாப்பு வழங்க வேண்டும். இலங்கை அரசு போர் நிறுத்தம் செய்ய வேண்டும். மத்திய அரசுதான் இதில் உடனடியாகத் தலையிட வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே வலியுறுத்துகிறோம். அதை என்றையதினம் எடுத்து தீர்மானமாக நிறைவேற்றுவீர்கள் என்பதைத்தான் இந்த அவையிலே இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் தலைவர் பேசப் போகிறார். உட்காருங்கள். அவருடைய கருத்தை அவர் சொல்லட்டும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஹசன் அலி, உட்காருங்கள் முதலில்.

**திரு. கு. ஹசன் அலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**முனைவர் கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** You please sit down. (குறுக்கீடுகள்) No, no. sit down. திரு. சுதர்சனம், நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்லுங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுதர்சனம் பேசி முடித்துவிடட்டும். பிறகு நீங்கள் பேசுங்களேன். (குறுக்கீடுகள்) சரி, திரு. சி. கோவிந்தசாமி, பேசுங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் நடைபெற்று வருகின்ற பிரச்சினையையும், அங்கே இலங்கைத் தமிழர்கள் கொல்லப்படுவதையும் மனிதாபிமானமுள்ள யாரும் ஏற்றுக்கொள்ளமுடியாது என்பதிலே எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. இலங்கையிலே நடைபெறுகிற போர் இரு தரப்பிலும் நிறுத்தப்பட வேண்டும். அந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண்பதற்கு, அரசியல் ரீதியாக ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஒரு நியாயமான அரசியல் தீர்வை, இலங்கைத் தமிழ் மக்கள் அனைவருக்கும் ஒரு பாதுகாப்பு அளிக்கக்கூடிய ஒரு தீர்வை உருவாக்க வேண்டும் என்ற முறையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி இன்றல்ல, இந்தப் பிரச்சினை துவங்கியது முதல் அன்னை இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் இந்திய நாட்டின் பிரதமராக இருந்தபோது 1983 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையில், இன்னும் சொல்லவேண்டுமானால் ராஜீவ் காந்தி அவர்களுடைய மரணத்திற்கு முன்பும் சரி, ராஜீவ் காந்தி அவர்களுடைய கொடூரமான அந்தக் கொலைக்குப் பின்பும் சரி, ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் மக்கள் அனைவருக்கும் முழுமையான சுய ஆட்சி கிடைக்கக்கூடிய ஓர் அரசியல் தீர்வினை இலங்கை அரசு உருவாக்க வேண்டும் என்கிற நிலையை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். அந்த வகையில், இன்றைக்கு நடைபெறுகின்ற போரில் தமிழ் மக்கள் கொல்லப்படுவது நிறுத்தப்படவேண்டும். தமிழ் மக்களுக்கு உரிய நிவாரணங்கள் உடனடியாகக் கிடைக்கவேண்டும் என்ற முறையில், நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எடுத்த முடிவைத் தொடர்ந்து, மத்திய அரசாங்கம் சில நடவடிக்கைகளை எடுத்திருப்பது தொடரவேண்டும், இன்னும் இலங்கை அரசாங்கத்தை வலுவாக, பலமாக, அங்கே நிர்பந்தப்படுத்தி, போரை இரு தரப்பும் நிறுத்தி, அங்கே இரு தரப்பும் ஒரு சுமுகமான அரசியல் தீர்வினை, ஒன்றுபட்ட

இலங்கைக்குள் உருவாக்குவதற்கு நம்முடைய மத்திய அரசு இலங்கை அரசாங்கத்தை உரிய முறையிலே நிர்பந்தப்படுத்த வேண்டும் என்ற கருத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலே இடம் பெற்றுள்ள அனைத்துக் கட்சிகளுக்கும் இலங்கைத் தமிழர்கள் இன்றைய சூழ்நிலையில் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற சிந்தனையில் மாறுபட்ட கருத்தே இருப்பதற்கு வாய்ப்பில்லை. எல்லாத் தரப்பிலும் வெளியிலே கட்சியினுடைய தலைவர்கள் அறிக்கைகளை வெளியிடுவது, அந்தந்த இயக்கத்தின் சார்பிலே அவர்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தக்கூடிய நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

*முற்பகல் 11—25*

இன்று இதுவரையில் இல்லாத அளவிற்கு, இலங்கையில் வாழக்கூடிய அப்பாவித் தமிழர்களை, தமிழ் இனமே இல்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு அடியோடு அழித்துவிடவேண்டும் என்று அங்கே ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், அது போராளிகள் என்று அப்பாவித் தமிழர்கள் என்று பிரித்துப் பார்க்காமல், அமைதியான சூழ்நிலை உருவாக வேண்டும். அதற்கு முதல் தீர்வு, அங்கு போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்ற நிலை; தொடர்ந்து ஒரு சமரசத் தீர்வு வேண்டும் என்ற நிலை. இதிலே மாறுபட்ட கருத்து இல்லாத சூழ்நிலையினாலே, இங்கே வீற்றிருக்கின்ற அனைத்துக் கட்சித் தலைவர்களையும் நான் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வலியுறுத்தி, பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரும்புகிற தேதியில், அரசின் சார்பிலே ஒரு நல்ல தீர்மானத்தை வடிவமைத்து, மத்திய அரசுக்கு அனுப்பி வைப்பதற்கான நல்ல சூழ்நிலையை உருவாக்கித் தர வேண்டும்; அதற்கு ஆதரவு கொடுக்க வேண்டும்; தமிழ்நாட்டிலே இருக்கிற தமிழர்கள் அனைவரும்

ஒருங்கிணைந்து குரல் கொடுக்கிறார்கள். இலங்கைத் தமிழர் பிரச்சினையில் சுமுகத் தீர்வு ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தை நீங்கள் வெளிப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாட்டிலே அரசியல் கட்சிகள், பல்வேறு இயக்கங்கள், மாணவர்கள் எல்லாரும் குரல் கொடுக்கிறார்கள். அப்படியானால், ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டுப் பிரச்சினையாக, தமிழர்களுடைய குரலாக ஒலிக்க வேண்டும்; அதற்கு அனைவரும் ஆதரவு கொடுக்க வேண்டும்: இதை வேறுபடுத்தி, பிரச்சிணையாகப் பார்க்க வேண்டாம் என்று பணிவோடு கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுகிறீர்களா, அல்லது அவர் பேசுகிறாரா? (குறுக்கீடு) சரி, அவர் பேசட்டும்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுக்கு ஓர் உண்மை தெரிந்தாக வேண்டும். மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர், மாண்புமிகு பெரியவர் சுதர்சனம் அவர்கள் பேச எழுந்தவுடன், சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள், 'உட்காருங்கள், உட்காருங்கள் தலைவர் அவர்கள் பேசப் போகிறார்கள்' என்கிறார்கள். சட்டப் பேரவைத் தலைவருக்கு யார் தலைவர் என்பது எங்களுக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் கட்சித் தலைவர். காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் என்று சொன்னேன்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அப்படி நீங்கள் சொல்லவில்லை. (குறுக்கீடு) மற்றவர்களைப் பார்த்து, 'உட்காருங்கள், உட்காருங்கள்' என்றீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No, No. காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்த்து, உங்கள் கட்சியின் தலைவர் பேசப் போகிறார் என்று நான் சொன்னேன்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அப்படி நீங்கள் சொல்லவில்லை.

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரம் முடிந்தவுடன் இந்த zero hour-ல் யார், யார், என்னென்ன பிரச்சினைகளைப் பேச ஆரம்பிக்கின்றார்களோ, அந்தப் பொருளை நீங்கள் புரிந்துகொண்டு... (குறுக்கீடு)

2008 நவம்பர் 11]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலிலே நீங்கள் விஷயத்தைச் சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** சொல்லிவிடுகிறேன். யார் பிரச்சினையை எழுப்புகிறார்களோ, அவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்து, பொருளைப் புரிந்துகொண்டு, 'இன்றைக்கு நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள், நாளை அல்லது நாளை மறுநாள் எடுத்துக்கொள்ளப்படும், ஆய்விலே இருக்கிறது' என்று ஏதாவது சொன்னால், அவர்கள் பேசாமல் உட்கார்ந்துவிடுவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, thanks for your suggestion. உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** தேவையில்லாமல் 40 நிமிடங்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேறு ஏதாவது இருக்கிறதா? சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இருக்கிறது. ஏன் வெளியே சென்றோம் என்பதைச் சொல்ல வேண்டும் அல்லவா நாங்கள்? மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த 30-10-2008 அன்று தேவர் திருமகனாருக்கு நினைவஞ்சலி செலுத்த பசும்பொன் கிராமத்திற்குச் சென்றபோது நடைபெற்ற கொலை வெறித் தாக்குதல் (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். எவ்வளவு நேரம் பொறுமையாக இருந்தேன்? நான் பேசுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், (குறுக்கீடுகள்) One minute, கேளுங்கள், ஒரு subject-ஐச் சொன்னார்கள். அதற்கு அவர் பதில் சொல்லப் போகிறோம் என்று சொல்கிறார். மத்திய அரசாங்கத்தைக் குறை சொன்ன மாதிரி அவர் feel பண்ணி, அதற்குப் பதில் சொல்ல வேண்டும் என்கிறார். நீங்கள் different subject-க்குப் போகிறீர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை நான் என்ன சொல்கிறேன் என்றால், இலங்கைத் தமிழர் சம்பந்தப்பட்ட பிரச்சினையை அவர்கள் பேசிக்கொண்டு வந்தார்கள். அது சம்பந்தமாக அவர் சொல்ல வருகிறார். நீங்கள் வேறு subject-க்குப் போகிறீர்கள். அடுத்த தடவை பேசுங்களேன். (குறுக்கீடு)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஒரு கட்சிக்கு, எத்தனை பேருக்குப் பேச வாய்ப்புக் கொடுப்பீர்கள்? தெரியாமல்தான் கேட்கிறேன், சொல்லுங்கள்.

[2008 நவம்பர் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் இருக்கட்டும். உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன். திரு. செங்கோட்டையன் பேசினார், அடுத்து நீங்கள் பேசுகிறீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) மாறுபட்ட கருத்து கிடையாது. உங்களுக்கு வாய்ப்புத் தரமாட்டேன் என்று நான் சொல்லவில்லை. (குறுக்கீடு) அது என்னுடைய discretion. முதலில் அதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பன்னீர்செல்வம் கேட்கிறார், நீங்கள் எப்படி, யார் யாருக்குக் கொடுக்கலாம் என்று. இந்த அவையில், யார், யாருக்கு, எத்தனை பேருக்கு, எவ்வளவு நேரம் கொடுப்பது என்பது சட்டமன்றத் தலைவருக்குரிய முழு உரிமை. அதிலே கேள்வி கேட்பதற்கு யாருக்கும் உரிமை கிடையாது. எனவே, அவையை சுமுகமாக நடத்த, ஒரே கட்சியிலே இரண்டு பேரையும் கூப்பிடலாம்; ஒரு கட்சியைக் கூப்பிடாமலும் இருக்கலாம். அது அவைத் தலைவருடைய முழுப் பொறுப்பு. அதை நீங்கள் கேட்க முடியாது. ஆனால், உங்கள் ஆட்சியில் யாரையுமே கூப்பிடாமல் ஒரு காட்டு தர்பார் நடத்தினீர்களே, அப்படி அல்ல இது. (குறுக்கீடுகள்)

*முற்பகல் 11–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** One minute, நீங்கள் உட்காருங்கள். திரு. சுதர்சனம், பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் வேறு subject–க்குள்ளே போகிறீர்கள். நான் அவரை பேசச் சொல்லப் போகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இந்த அவையைப் பொறுத்த அளவிலே, யாரைப் பேசக் கூப்பிடவேண்டும், யாரை பேசக் கூப்பிடவேண்டாம் என்று நான்தான் முடிவெடுக்கவேண்டும். நீங்கள் சொல்லி நான் எடுக்கவேண்டிய அவசியம் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பன்னீர்செல்வம் அவர்கள் ஏற்கெனவே முதலிலே ஒரு பிரச்சினையை எழுப்பி வெளிநடப்புச் செய்து, மறுபடியும் உள்ளே வந்திருக்கிறார்கள்.

2008 நவம்பர் 11] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

இதற்கிடையில் இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை குறித்து பல்வேறு கட்சித் தலைவர்கள் கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர், அவர்களுக்குப் பதில் சொல்ல வாய்ப்புக் கேட்கிறார். அவருக்கு வாய்ப்புக் கொடுத்துவிட்டு, அந்தப் பிரச்சினை முடிந்ததற்குப் பிறகு, தேவைப்பட்டால் மறுபடியும் நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எழுப்பலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் நானும் சொல்லிக்கொண்டிருக்கிறேன். இலங்கைத் தமிழர் சம்பந்தமாக அவர்கள்மேல் குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள். அதற்குப் பதில் சொன்னதற்குப் பிறகு உங்களுக்குத் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறேன். நீங்கள் அந்த subject–க்குள்ளே போகமாட்டேன் என்கிறீர்களே? நீங்கள்தான் முதலிலேயே ஒரு prejudiced mind–உடனேயே அல்லவா வருகிறீர்கள்?

## 6. இலங்கையில் தமிழர் பகுதிகளில் நடைபெறும் போரினால் அங்குள்ள தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு—தொடர்ச்சி

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு கட்சித் தலைவர்கள், இலங்கையிலே உடனடியாகப் போர் நிறுத்தப்படவேண்டும் என்று இங்கே வேண்டுகோள் வைத்தார்கள். இலங்கையிலே உடனடியாகப் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்பதிலே காங்கிரஸ் பேரியக்கத்திலும் மாற்றுக் கருத்து யாருக்கும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அங்கே அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவதை காங்கிரஸ் கட்சி ஒரு நாளும் ஏற்றுக்கொள்ளாது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, பல்வேறு தீர்மானங்களை நிறைவேற்றி, அந்தத் தீர்மானங்களின் அடிப்படையிலே, இன்றைக்கு டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் தலைமையிலே இருக்கின்ற அரசானது பல்வேறு காரியங்களைச் செய்து வருகிறது. அப்படிப் பல்வேறு காரியங்கள் செய்திருப்பதன் பயனாக, அங்கே இருக்கின்ற அப்பாவித் தமிழ் மக்களுக்கு மத்திய அரசு 800 டன் உணவுப் பொருட்களை உடனடியாக வழங்கியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) யாரையும் எதிர்பார்க்காமல் வழங்கியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக அரசு நிதி வசூல் செய்து அதன்மூலமாக அவர்களுக்கு வேண்டிய உணவும், உடையும், இந்திய, தமிழக அரசின் சார்பாக

வழங்கியிருக்கிறது. அது ஐ.நா. சபையின் மூலமாக, இந்திய தூதரகத்தின் மூலமாக, செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலமாக வழங்கியிருக்கிறது. இப்படியிருக்கின்ற நிலையில், திடீரென்று விடுதலைப் புலிகள் நேற்று, 'நாங்கள் போர் நிறுத்தத்திற்குத் தயார்' என்று அறிவித்தார்கள். அறிவித்தவுடனே இந்திய அரசு என்ன செய்ய வேண்டுமோ, அதைச் செய்துகொண்டிருக்கிறது. தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களும் என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்துகொண்டிருக்கிறார்கள். நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டுமே தவிர, இந்தியா என்பது ஒரு நாடு, இலங்கை என்பது வேறு நாடு. இரண்டு நாட்டுப் பிரச்சினைகளை ஒரு நிமிடத்திலே தீர்த்துக்கொள்ளமுடியாது. ஆனால், அங்கே இருக்கின்ற அப்பாவித் தமிழர்களுக்கு வாழ்வைத் தேடிக் கொடுக்க வேண்டியது நம்முடைய கடமை. அந்தக் கடமையிலேயிருந்து யாரும் பின்வாங்கப் போவதில்லை. இந்திய அரசும் பின்வாங்கப் போவதில்லை. தமிழக அரசும் பின்வாங்கப் போவதில்லை. இதுவரை இந்திய அரசு என்னென்ன செய்தது என்பதைப் பற்றி, நீங்கள் ஒரு தேதி குறிப்பிட்டு எங்களுக்குத் தெரிவிப்பீர்களேயானால், இந்திய அரசு இலங்கையிலே வாழ்கின்ற தமிழர்களுக்கு, அப்பாவித் தமிழர்களுக்கு என்னென்ன நன்மைகளை இந்தக் குறுகிய காலத்திலே செய்திருக்கிறது என்பதைப் பற்றி விவரமாகவும், விளக்கமாகவும் நாங்கள் சொல்லத் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் தயவுசெய்து உடனடியாக ஒரு தேதியைக் குறிப்பிடவேண்டும். அந்தத் தேதியிலே இந்த விவாதத்தை வைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்திலே, இலங்கையிலே வாழ்கின்ற அப்பாவித் தமிழர்களுக்குத்தான் எங்களுடைய ஆதரவே தவிர, இலங்கையிலே போர் நிறுத்தம் என்ற பெயரிலே அறிவிப்புச் செய்கின்ற விடுதலைப் புலிகளுக்கோ, தமிழகத்திலே இருக்கின்ற விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களுக்கோ காங்கிரஸ் கட்சியும், மற்ற இயக்கங்களும் ஒரு நாளும் ஆதரவாக இருக்கமாட்டோம் என்ற உறுதிமொழியை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயல்படுகின்றவர்கள்மீது தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய கொள்கை. அதைத் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. இராமகிருஷ்ணன்.

*முற்பகல் 11-35*

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலே நடைபெறுகின்ற இனப் படுகொலை அத்து மீறிச் சென்றிருக்கின்றது. (குறுக்கீடு) சும்மா இருங்கள் சார். (குறுக்கீடு) நீங்க பாட்டுக்கு இருங்கள். (குறுக்கீடு) எங்களுக்குத் தெரியும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** உங்களைப் பார்த்துத்தான் பேசுகிறேன் சார். அவர் என்னைப் பார்த்துப் பேசுவதற்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அவரைப் பார்த்து ஏன் கையை நீட்டுகிறீர்கள்? என்னைப் பார்த்துப் பேசுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** அவர் என்னைப் பார்த்துப் பேசுவதற்கு நீங்கள் கண்டனம் தெரிவிக்க வேண்டும். (குறுக்கீடு) அவர் என்னைப் பார்த்துப் பேசுகிறார். (குறுக்கீடு) இப்போது பிரச்சினை தீவிரம் அடைந்திருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் பேசி முடித்த பிறகு கடைசியிலே நீங்கள் கையை தூக்கிக் கொண்டு நிற்கிறீர்களே? அது ஏன்?

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் இந்தியப் பிரதமர் அவர்களைச் சந்தித்து, அங்கே நடக்கின்ற இனப் படுகொலைக்கு இந்திய அரசு எந்த வகையிலேயும், ஆயுதங்களையோ, ரேடார்களையோ, தொழில்நுட்ப வல்லுநர்களையோ அனுப்பக்கூடாது என்று வேண்டுகோள் வைத்திருக்கின்றார்கள். அதன் அடிப்படையில் மாண்புமிகு பிரதமர் அவர்களும், 'நிச்சயமாக அனுப்பமாட்டோம்' என்று சொல்லியிருந்தார்கள். இந்தச் சூழ்நிலையில், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகிக்கின்றபோது, இந்தியாவிற்கும், இலங்கைக்கும் பாதுகாப்புப் படை அமையவிருப்பதாகக் கேள்விப்பட்டு, பிரதமரைச் சந்தித்து, 'அப்படி அமைக்கக் கூடாது' என்று சொன்னார்கள். அதற்கும் பிரதமர் ஒத்துக்கொண்டார்கள். ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. இராமகிருஷ்ணன், இந்த subject–ஐ ஏற்கெனவே

---

**மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

எல்லோரும் discuss செய்தாகிவிட்டது. (குறுக்கீடுகள்) என்ன இது? (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) என்ன பீட்டர்? சொல்லுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன் அவர்கள் சில தவறான தகவல்களை இந்த அவைக்குத் தருகிறார். அந்தத் தகவல்களை அனுமதிப்பதும், அவற்றை இந்த அவைக் குறிப்பேட்டில் பதிவு செய்வதும் மிகத் தவறு. அவர் சொல்லிய. மத்திய அரசுக்கு எதிரான அந்தத் தவறான குற்றச்சாட்டுகளை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் அவர்கள், தேவைப்பட்டால் இதைப் பற்றிய ஒரு வாதத்திற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார். தமிழகம் எதிர்நோக்கியுள்ள இந்த மிகப் பெரிய அரசியல் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டிய கடமை இந்த அவைக்கு இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையில் எவ்வளவு முக்கியமான கோரிக்கைகளை வைத்துக்கொண்டு, போராடிக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை நாங்கள் அறிவோம். ஈழத் தமிழர்கள்பால் அக்கறை கொண்டிருக்கிறோம். ஆனால் அதே நேரத்திலே, இதை ஒரு அரசியலாக்கி, காங்கிரஸ் கட்சியையும், அதனோடு கூட்டணி கொண்டிருக்கின்ற கட்சிகளையும் பலவீனப்படுத்தி, அரசியல் ஆதாயம் தேடுவதை காங்கிரஸ் கட்சி அனுமதிக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய இறையாண்மைக்கும், இந்திய ஒருமைப்பாட்டுக்கும், இந்த நாட்டிலே வன்முறையற்ற அரசியலுக்கும், ஜனநாயகத்திற்கும் காங்கிரஸ் கட்சி என்றும் துணை நிற்கும். அதைப்போன்ற நடவடிக்கைகளைத்தான் அரசியல் ரீதியாக எல்லோரும் எதிர்பார்க்கிறோம். மத்திய அரசையோ, காங்கிரஸ் கட்சியையோ தவறாகக் குற்றம் சாட்டுகின்ற அந்தத் தவறான தகவல்களைத் தாங்கள் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டுமென்று நான் காங்கிரஸ் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். இதற்கான ஒரு நாள் குறியுங்கள். அந்த நாளிலே அவர்களும் தங்கள் தரப்பு வாதங்களை வைக்கட்டும். நாங்களும் எங்கள் தரப்பு வாதங்களை வைக்கிறோம். இந்த மன்றத்திலே, மக்கள் அனுப்பியிருக்கிற அத்தனை அரசியல் கட்சிகளும் இந்த ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து தங்கள் நிலைகளை இந்த மன்றத்திலே தெளிவாக்கட்டும். நாட்டு மக்கள், அவற்றில் யாருடைய் நிலைப்பாடு சரியானதோ, அதை ஏற்றுக்கொள்ளட்டும். அதற்கு நாங்கள்

தயாராக இருக்கிறோம். பயந்தவர்கள் அல்ல. எனவே, இந்தத் தவறான தகவல்களைத் தாங்கள் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமகிருஷ்ணன் மத்திய அரசு பற்றிச் சொன்ன அந்தக் குற்றச்சாட்டுகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

***டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** Speaker Sir, யாருக்கும் தெரியாமல், கள்ளத்தோணியிலே போக வேண்டிய அல்லது அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை.

(முற்பகல் 11–40)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோவோ அல்லது நம் கண்ணப்பனோ இந்திய ஒருமைப்பாட்டுக்கோ, ஒருங்கிணைப்புக்கோ, இறையாண்மைக்கோ குந்தகம் விளைவிக்கக்கூடியவர்கள் அல்ல. அவர்களுடைய அரசியல் வரலாற்றை எடுத்துப் பார்த்தால் நாட்டிற்குத் தெரியும். தேசிய நதிகளை இணைக்க வேண்டுமென்று சொல்வது தவறா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், திரு. இராமகிருஷ்ணன். உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, இப்போது debate இல்லை. நீங்கள் என்ன சப்ஜெக்டை சொல்லப் போகிறீர்கள் என்பதற்குத்தான் அனுமதி. உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுசம்பந்தமாக விவாதம் கிடையாது. மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அவர் குறிப்பிட்ட இரண்டு நபர்கள்மீது வழக்குத் தொடுக்கப்பட்டு நீதிமன்றத்தில் இருக்கின்றது. அவர்கள் குற்றவாளிகளா, இல்லையா என்பதற்கு, அந்த நபர்களுக்காக இவர் வாதாடக்கூடாது. அதை அனுமதிக்கக்கூடாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், திரு. இராமகிருஷ்ணன். நீங்கள் என்ன சப்ஜக்ட்டை சொல்லப் போகிறீர்கள் என்பதுதானே தவிர, நீங்கள் உங்கள் கருத்தைப் பூராவும் இப்போது சொல்வதற்கு வாய்ப்பு இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) சரி.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** இலங்கையிலே (குறுக்கீடு) நீங்கள் சொன்னதற்கு நான் சொல்ல வேண்டும் அல்லவா? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதோ பாருங்கள், இங்கே பார்த்துப் பேச வேண்டும்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** அவர்களையும் உங்களைப் பார்த்துச் சொல்லச் சொல்லுங்கள். என்னைப் பார்த்துச் சொல்கிறார்கள் சார். இலங்கையிலே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** இலங்கையில் நடைபெறுகின்ற போரை நிறுத்துவதற்கு இந்திய அரசுக்கு அழுத்தம் தருகின்ற வகையிலே தமிழக அரசு இந்த அவையிலே தீர்மானம் கொண்டு வரவேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும். திரு. ஓ. பன்னீர்செல்வம், சொல்லுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைப் பிரச்சினை குறித்து பல்வேறு கட்சிகள் தங்களுடைய கருத்துகளை இங்கே தெரிவித்தன. இலங்கைவாழ் தமிழர்கள், அப்பாவித் தமிழர்கள் அங்கு கொல்லப்படுவதை, இங்கே இருக்கின்ற அத்தனை பேரும், நாம் அனுமதிக்க முடியாது என்ற ஒத்த கருத்தை நாம் கொண்டுள்ளோம். ஆனால், இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இந்த விவாதம் திசை திரும்பி, வேறு எங்கோ சென்றுகொண்டிருக்கிறது. அதனால் அங்கு இருக்கின்ற தமிழர்களுக்கு எம்மாதிரியான தீர்வு கிடைக்கும் என்பதற்கு, கேள்விக்குறியான ஒரு சூழ்நிலை நம்முடைய தமிழகச் சட்டமன்றத்திலிருந்து கிடைக்கக்கூடாது என்பதனை நான் இங்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அங்கே இலங்கை இராணுவம் போரை நிறுத்தவேண்டுமென்று நாம் அனைவரும் இங்கே குரல் கொடுத்தோம். அப்போதுகூட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஒரு தரப்பு மட்டும் போரை நிறுத்திவிட்டால் போர் முடியுமா என்று சொன்னார்கள். முதலாவதாக விடுதலைப்

புலிகள், 'நாங்கள் போரை நிறுத்தத் தயார்' என்று அறிவித்தார்கள். ஆனால் இன்றைக்குப் பத்திரிகையில் வந்த செய்திகளின்படி, இலங்கை இராணுவம் 'போரை நிறுத்த முடியாது' என்று சொல்லியிருக்கின்றது. அதற்குப் பின்னால், இன்றைக்கு இருக்கிற மத்திய அரசு, கடந்த காலங்களில் ஏற்பட்டிருக்கின்ற பல்வேறு ஒப்பந்தங்களில் எதுவுமே நடைபெறாத சூழ்நிலையில், அங்கே வாழ்கின்ற நம்முடைய இலங்கைத் தமிழர்களைக் காக்கின்ற பொறுப்பினை நல்ல முறையில் எடுக்க வேண்டும். ஏனென்று சொன்னால், விடுதலைப் புலிகள் போரை நிறுத்துவதற்குத் தயார் என்று அறிவித்த பிறகும், இராணுவம் நிறுத்த முடியாது என்று சொல்லியிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், தொடர்ந்து இராணுவம் அங்கே அப்பாவித் தமிழ் மக்கள் வாழ்கின்ற குடியிருப்புப் பகுதிகள், பள்ளிக்கூடங்கள், பச்சிளம் குழந்தைகள் படிக்கின்ற பள்ளிக்கூடங்கள், வழிபாட்டுத் தலங்கள், இவற்றை எல்லாம் சர்வநாசம் ஆக்கிக்கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலை; அங்கே இலட்சக்கணக்கான பேர் அகதிகளாக வாழ்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசை உடனடியாகத் தொடர்புகொண்டு, இலங்கையின் இராணுவமும் போரை நிறுத்துவதற்குண்டான வழிவகைகளை ஏற்படுத்த வேண்டும். அதற்குரிய வழிவகைகளை இங்கே இருக்கின்ற நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர்களும், மத்தியிலே இருக்கின்ற மத்திய அரசும் அந்த வேண்டுகோளை விடுத்து, இலங்கை இராணுவம் போரை நிறுத்தி, இரு தரப்பும் சுமுகமான தீர்வு காண்பதற்குரிய நல்ல வழியைக் கண்டுபிடித்து, அங்கே வாழ்கின்ற இலங்கைத் தமிழர்கள் நிம்மதியாக வாழ்வதற்குண்டான வழிவகைகளைச் செய்வது ஒன்றுதான் தீர்வுக்கு வழி. ஆகவே, நாம் முரண்பட்ட கருத்துகளை, அரசியல் ரீதியான கருத்துகளை, இங்கே தெரிவித்து, அந்தப் பிரச்சினையை வேறு திசைக்கு, வேறு பக்கம் திருப்ப வேண்டாம் என்று அனைவரையும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*முற்பகல் 11–45*

## 5. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### (அ) தமிழகத்தில் உரத் தட்டுப்பாடு காரணமாக விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள நிலை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, சிறப்புக் கவன ஈர்ப்புக்குப் போகலாமா? (குறுக்கீடு) உரத் தட்டுப்பாட்டால் தமிழ்நாடு